64

KING GEORGE V.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - NOV 1914
MADRAS.

I. SAMINATHAN.

Y56
N12
120424

ஜார்ஜ் மன்னன் விபவம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - NOV 1914
MADRAS.

ஐ. சாமிநாத முதலியார்,

Retired Supervisor of Elementary Schools, Tanjore

முதற் பதிப்பு

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1912 [விலை $1\frac{1}{2}$ அணா

PRINTED AT

THE 'CAXTON PRESS,'

MADRAS.

170474

சென்னை-600 008.

OFFICE OF THE REGISTRAR OF B...
5 - [illegible] 1914
MADRAS

INTRODUCTION

The author of the booklet, Mr. I. Swaminadha Mudaliar, has taken immense pains in writing a short history in learned Tamil of the world-renowned King-Emperor, His Gracious Majesty George V. In doing so he has given the geneology of the British sovereigns from George III, and has sufficiently described the greatness of Queen Victoria, the Good, and her illustrious son Edward VII, the Peace-maker. The Coronation of the reigning King-Emperor and Queen-Empress in London on the 22nd June, 1911, and the graciousness, with which Their Imperial Majesties, condescended to travel ten thousand miles and be crowned in Delhi—the ancient capital of India; the boons, which they were pleased to confer upon the Indian subjects; the love and sympathy, which they have exhibited for the Indian people both as Prince and Princess of Wales and as the ruling monarchs; the peace and prosperity which have resulted to India by the British rule in general, and by the present administration in particular, have all found their places in the pamphlet. The thanks of the Tamil reading population of the presidency of Madras are due to the author for his able production in the vernacular, which deserves encouragement.

(Sd.) *G. SRINIVASA RAO.

27-10-12.

**Public Prosecutor, District and Sessions Court, Madura, and one of the two gentlemen of the southern part of the presidency that were present in London on the most happy occasion of the Coronation of His Gracious Majesty King George V of England and Emperor of India.*

AUTHOR'S PREFACE.

This little work of mine entitled George V, written nearly two years back, has been slow in seeing the light. This is due partly to my diffidence as to how the public would receive it, and greatly to my desire for the good get-up thereof, with necessary woodcuts to make it acceptable. The former was overcome by the kind persuation of some of the leading Educationists, while the latter could not be so easily done. I found few printing-offices in the mofussil which would meet my requirements. I therefore had to go over to Madras, more than once, for the purpose. The Caxton Press, of Messrs. C. Coomarasawmy Naidu & Sons, had the kindness to do the work in the manner of my design. The delay will, I hope, be overlooked. My sincere thanks are due to the educational officers who encouraged me, to Messrs. C. C. Naidu & Sons for the good get-up, and to Rao Bahadur G. Srinivasa Rao for the kind introduction.

I. SAMINATHAN.

15-2-14.

முகவுரை

தஞ்சைமாநகரத்தில் கரந்தைப் பதியில் சென்ற டிஸம்பர் மாதத்தில் கொண்டாடிய டில்லி தர்பார் மகோத்சவத்தில் ஒருநாள் காலே ஸ்ரீமான் பூண்டி V. A. வாண்டையார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஓர் வித்துவக் கழகம் கூட்டப் பெற்றுப் பரிசளிக்கப் பெற்றது. அதில் சதாவதானம் பிர்மஸ்ரீ சுப்ரமண்ய ஐயர் அவர்கள் முதலிய வித்துவ சிரோமணிகளின் பிரசங்கம் நடை பெற்றது. அதைக் கண்டு கேட்டு மகிழும்படி யானும் அங்கே சென்றிருந்தேன். சதாவதானியார், தாம் பிரசங்கம் தொடங்கு முன் என்னே விளித்து, ஏதாயினும் சில விஷயம் அச்சமயம் சொல்கவெனக் கேட்டனர். சபையின் பெருமையும், எனது எளிமையும் யான் அறிந்திருந்தும், ஐயரவர்கள் சொல்லே மறுக்க அஞ்சியும், அரசர் பெருமான் புகழ் கூறக் கிடைத்த பெருமையை எண்ணியும், யாதேனும் சில சொல்வான் துணிந்து அத்தாணிமேல் ஏறினேன். யான் சொன்னது சொற்பமாயினும், கேட்டோர் வியப்பு மிகுத்துவரக் கண்டு, அம் மகான் விபவத்தைச் சற்று விரித்துச் சொல்லவேண்டும் என்னும் எண்ணம் என்னில் உண்டாயது.

இஃது இங்ஙனமாக, நாகைத் தமிழ்ச் சங்க வருஷ மகோத்சவம் இப்பால் நிகழ்ந்தது. அதில் ஒரு வியாசம் எழுதி வாசிக்கும்படி, அச் சங்கத்தலைவர் ஸ்ரீமான் சதாசிவம் பிள்ளை அவர்கள் என்னே விரும்பினர். எனது இராஜ பக்தியை வெளியிட, இது தக்க சமயம் என்றெண்ணி,

அவர் விருப்பத்திற்கிசைந்து 'ஜார்ஜ் மன்னன் விபவம்' என்ற தலைப்பில் ஒரு வியாசம் எழுதி வாசித்தேன். இராஜ ராஜேந்திரன் விபவம் என்ற மாத்திரையிலே யாவரும் விரும்பிக் கேட்கலாயினர். 'விரும்பிய ஒன்று வேம்பே யெனினும் கரும்பாகும்' என்ற விதிப்படி, எனது வியாசம், யாவரும் மெச்சும் வியாசம் ஆயினதன்றி, அச்சிலேற்றும் துணிவையும் என்னில் உண்டாக்கியது. அரசு என்ற பெயரை வகித்து நிற்கும் மரமும் மதிக்கப்பெறுமாயின், அரசர்க்கரசன் விபவம் கூறும் வியாசம் ஏன் மதிக்கப் பெறாது, என்பது என்பற்றுக் கோடாயிற்று.

இனி இந்த வியாசம் ஆறு அதிகாரங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. அவை தாம்:

I. குலமுறை கிளத்தல்
II. நலம்புனைந்துரைத்தல்
III. வாழ்க்கைத் துணை நலம் கூறல்
IV. அரசியலுரைத்தல்
V. அமைச்சமைப் புரைத்தல்
VI. குடிநலம் புனைதல் — என்பனவாம்.

I. S.

OFFICE OF THE REGISTRAR ... 5 - NOV 1914

ஜார்ஜ் மன்னன் விபவம்

I. குலமுறை கிளத்தல்

"திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே" (திருவாய்மொழி)

திருவுடை மன்னர் யாவரும் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்பதே, இதன் கருத்து. "திருவுடை" என்னும் அடையால், எல்லா மன்னரும் தெய்வத்தன்மை பொருந்தியவராகார்; எல்லா வளமும் பொருந்திய ஒரு சிலரே அத் தன்மையராவார் என்பது பெறப்படும். அத் தகைய திருவுடை மன்னரை வரிசைப்படுத்தினால், நமது ஐந்தாம் ஜார்ஜ் மன்னரே முன் னிற்றற்குரியராவார், என்பது திண்ணம்; உலகில் உள்ள திருவுடை மன்னர் யாவரினும், ஆங்கில அரசர்கள் சிறந்தவர் என்பதும் திண்ணம்; ஆங்கில அரசர் யாவரினும், இவர் பரம்பரையிலுள்ளார், மிகச் சிறந்தவர் ஆவார் என்பதும் திண்ணம். ஆகவே இவர் பரம்பரையில் உள்ளாரை எடுத்துத் தனித்தனி கூற வேண்டும். இது செய்ய எமது சிறு வியாசத்தில் இடம் கிட்டாது; சிறிது எடுத்துக் கூறுவிடில், நமது கொள்கையைத் தெளிவுறுத்த இயலாது. ஆதலால் இவர் மூதாதையராகிய மூன்றும் ஜார்ஜ் முதல் கூறுவது போதுமானது:—

I. ஜார்ஜ் III—தாமாக இருந்து 50 வருஷமும் தமது மூத்த குமாரரைப் பிரதிநிதியாகக் கொண்டு 10 வருஷமும்

ஆக அறுபது வருஷம் ஆண்டார். இவர் ஆட்சி நல்லதும் நீண்டதுமாகும். இவருக்குப் புத்திரர் எழுவராவார். அவருள்—

(a) இரண்டாவது புத்திரர், அரசுரிமை தம்மைக் கிட்டி வருமுன், சந்ததி இன்றித் தேகவியோகமாயினர்;

(b) ஐந்தாவதவரும் அங்ஙனமேயாயினர், என்றாலும் ஒரு புத்திரரைப் பின் வைத்துப் போயினர். இவரும் ''ஹாநோவர்'' என்னும் வேறுநாட்டு அரசுரிமை பூண்டு அந்நாட்டுக் குரியராய் ஆங்கில நாட்டை விட்டகன்றார்;

(c) ஆறுவதவர், குடிவழிப் பெண்ணை மணம் புரிய நேர்ந்தது; ஆதலால், அவர் சந்ததியாருள்ளிட, அரசுரிமைக்கு அநருகராயினர். ஆகவே, ஈண்டு விவரிக்கப் பெறுவார், நால்வரே யாவர்.

2. ஜார்ஜ் IV — இவர்தான் மூத்தகுமாரர்; முதலில் இளவரசுப்பட்டம் பூண்டிருந்து பின்னர்ப் பிரதிநிதியாக ஆண்டு, அப்பால் நான்காம் ஜார்ஜ் என்னும் அரசர் ஆயினர். இவர் ஆட்சி நீண்டதுமன்று, சிறந்ததுமன்று. இவர் சந்ததியார், இவருக்கு முன்னரே விண்ணுலகடைந்தனர்;

3. உவில்லியம் IV — இவர் மூன்றாங் குமாரர்; மூத்தவரிருவருக்கும் சந்ததியில்லாமல் போயினமையின் அரசுரிமை யிவரைக் கிட்டியது. இவர் ஆட்சி நீண்டதன்று; ஆயினும் சிறந்ததென்றே சொல்லவேண்டும். இவர் சொந்தமக்கள் இவருக்குப் பின்னின்றாரில்லை; ஆதலால், இவர் கனிட்டரும், மூன்றாம் ஜார்ஜின், நான்காம் புத்திரருமாகிய எட்வார்ட் பிரபுவானவர் பெற்று வைத்துவிட்டுப் போயின, அலக்சாண்டிரா, விக்டோரியா என்னும் பெண்மணியைத் தமது கண்மணியாகப் பாவித்து, வளர்த்து

வந்தனர். இந்த அம்மணி கையில், தாம் தாங்கிவந்த ராஜ்யபாரத்தை ஒப்புவித்துப் போகவேண்டி, இம் மணிக்குப் போதுமான வயது "என்று வரும், என்று வரும்" என்று காத்திருந்தவர் போலப் பதினெட்டாம் வயது வந்த இருபத்தெட்டா நாள், தாம் தேகவியோக மாயினர்;

4. **விக்டோரியா**—இந்த அம்மணி, தாம் 18ஆம் வயதில், பாராளும் உரிமை பெற்றவராயினும், உலகமெச்சும் குணமுடையவராயிருந்து, மந்திரத்தாரும் தந்திரத்

தாரும் மற்றையோரும் கண்டு வியந்து பயமும் பக்தியும் உடையவராய் நடக்கும்படி காரியங்கள் செய்து வருவாராயினர்;

ஆங்கில நாட்டை யாண்டு வந்தவர்களுள், ஆல்பிரட்-தி-கிரேட் (Alfred, the Great) என்பவருக்கு அடுத்தபடி எடுத்துக் கூறத்தக்கவர் இவரே யென்று சரித்திரங் கூறும்படி செங்கோல் செலுத்தி வந்தனர். இவர் அரசுரிமை கொண்ட ஆறுநாள், தமது மாமன் மகனாகிய, ஆல்பெர்ட் - தி - குட் (Albert-the-Good) என்பவரால் எழுதப் பெற்றுள்ளது ஓர் கடிதம்; அது யாவரும் படித்தறிய வேண்டியதே. அதையும், அதற்கோர் மொழி பெயர்ப்பையும் இதனடியிற் காட்டுதும்:—

"Now, you are the Queen of the Mightiest land of Europe. In your hand lies the happiness of Millions. May Heaven assist you and strengthen you with its strength in that high but difficult task. I hope your reign may be long, happy and glorious, and that your efforts may be rewarded by the thankfulness and love of your Subjects."

பெண்ணணங்கே நீ யாளப் புக்கதொரு பேருலகம்
எண்ணிறந்தார் சேமமுன தின்கையது-புண்ணியக்கை
நீடாழி யேந்த நிலவு புகழ்தழைக்க
நீடூழி யானருள நேர்ந்து

என்று இவ்வாசி கூறி யருளிய மாமன் மகனே மறு வருஷம், தனக்கு மணவாளப் பிள்ளையாயினர். இவர் கூறிய ஆசியில், ஒரு சிறிதும் குறையாமல், முற்றும் பலித்தது, உற்று நோக்கத்தக்கது. ஆனல் இவர்மட்டும், தான் சொல்லியதில் பாதி பலிக்கு முன்னரே, பரலோகப் பிராப்தியாயினர். கணவன் இறந்தபின், நமதன்னைக்கு உலகம் கைத்தே போயினது; என்றாலும், கணவரிடத்துள்ள அன்

பின் மிகுதியால், அவர் திருவாக்குச் சிறிதும் தவறுதலா காது என்று எண்ணினர் போன்று, பின்னும் முயன்று, ஏராளமான இராச்சியங்களைச் சேர்த்துக் குடிகளுக்கு ஏற்றன பலவும் இனிதினளித்துப், பூவுலகெங்கும் புகழ்க் கொழுந்தோடிப் பரவும்படி அறுபத்து நான்கு வருஷம் அரசாண்டு, குடிகளின் நன்மையத்தையும் நல்லுணர்வையும் துணையாகக்கொண்டு பழுத்த பழமாய் விழுத்தகு வீடு பெற்றனர். இவர் நாளில்தான் ஆங்கில அரசாட்சி ஐந்து கண்டத்தும் சென்றது. இவர்க்கு ஆண் மக்கள் நால்வர், பெண் மக்கள் ஐவர். ஆங்கில அரசர்களுள், செல்வப்பேறு, கல்விப்பேறு, மகப்பேறு, புகழ்ப்பேறு, அனைத்தும் ஒருங்கே பெற்றுப் பெருமை வாய்ந்து விளங்கினரில் இவரே முதலாவதாவார். இவர் ஆட்சி மிக நீண்டது; மிக மிகச் சிறந்தது. யாம் என்றும் மறவாத நன்மைகள் பல இவரால் அடையப் பெற்றுள்ளேம்;

5. எட்வார்ட் VII — இவர் விக்டோரியா மகாராணியார்க்கு மூத்த குமாரர். இளவரசுப் பட்டம் பூண்டு அறுபது வருஷம் தாழ்த்து இருந்தனர். அறுபது வயதுக்குமேல் அரசாளப் புகுந்தார். பத்து வருஷம் ஆண்டார். "சண்டை" என்றும், "கலகம்" என்றும் எழுதப்பட்ட கடிதங்களையும் கண்ணால் பார்க்கப் பொறார்; ஒருகால் காண நேரிடில், கணமேனும் தாழாமல், சமரசப்படுத்தும் வழியை நாடுவர். "சமாதானம் ஆகிவிட்டது" என்னுஞ் சொல் செவியிற்பட்ட பின்னரே கண்ணுறக்கங் கொள்வர். இவ்வண்ணம், "சாந்த மூர்த்தச் சக்கரவர்த்தி" என்று மறுநாமம் பெறலாயினர். இவர்க்கு வாய்த்த மனைவியார் அலக்சாண்ட்ரா மகா தேவியார்; செல்வத்திற் பிறந்தவர்; கல்வியிற் சிறந்தவர்; அழகில்

HER MOST GRACIOUS MAJESTY THE QUEEN.

HIS MOST GRACIOUS MAJESTY THE KING.

இவர்க்கு ஒப்புயர்வு சொல்ல இல்லார்; கணவனிடத்தில் மிக்க அன்புள்ளார்;

"காதன் மனையாளும் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே"

என்ற நீதிக்கு பிரத்தியக்ஷ பிரமாணமாயுள்ள (Living Examples) தம்பதிகளில், முதற்றரத்துக் குரியவர் ஆவர் இத் தம்பதிகள். இவர்க்குப் புத்திர ரத்தின மிரண்டு. முற்றோன்றிய ரத்தினம், சாணையை விட்டிறங்கிச் சவைக்கேறு முன், கைநழுவித் தவறுண்டது. பிற்றோன்றியதோ, சாணைக் கொடுமைக்குச் சளையாது, ஒளியேற்றுச், சாணையினிறங்கிச், சவையேறி, உள்ளொளி பிறக்கி, உயர்ந்தோங்கி நிலவுகின்றது. இந்தச் சுத்த ரத்தினந்தான் நமது

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்.

இவரை விளக்க வாய்ந்த சவை

மேரிமா தேவியார்.

N. B. i. (1) தேவியார், மூன்றும் ஜார்ஜின், ஏழாம் புத்திரராகிய Adolphous பிரபுவின் பெண் வழித்தோன்றிய, பொன்மணி;

(2) 3-ம் ஜார்ஜின், நான்காம் புத்திரரின் வழித் தோன்றலாவார் ஐந்தாம் ஜார்ஜ் அரசர்;

ii. (1) தேவியார், மன்னர், இவர்களின் வம்சாவளிப்படி மூதாதைகளின் வரிசை எண்களைக் கூட்டினால் (7+4) 11 ஆகிறது. (Vide N. B. i. 1. & i. 2.)

(2) தேவியார் தலைமுறை எண்ணைக் கூட்ட (3+7+1+1) 12 ஆகிறது. (Vide N. B. i. 1.)

(3) மன்னர் தலை வரிசைகளைக் கூட்ட (3 + 4 + 5) 12 ஆகிறது. (Vide N. B. i. 2.)

இது பற்றியே 11ஆம் வருஷம், 12ஆம் மாதம், 12ஆம் தேதி தர்பார் மகோற்சவம் நடந்தேறும் பாங்கு பெற்றது போலும்.

iii. (1) 3ஆம் ஜார்ஜ் மிக நீண்டு, நலந்தோன்ற ஆண்ட அரசர்.

(2) இவர் பேர்த்தி விக்டோரியா மகாராணி, தம் மூதாதையினும் மிக நீண்டு, பன்மடங்கு சிறந்து ஆண்டு சக்ரவர்த்தினிப் பெயரை முதல் முதல் வகித்தவர்.

(3) இந்த அம்மணியின் பேரனாகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னன், இவரினும் ஆட்சி நீண்டு, புகழ்பூண்டு, மண்டலேசுவரர் என்னும் பெயரை வகித்தல் மரபேயன்றோ. அங்ஙனமே யாமாறு இறைவன் அருளுவானாக.

II. நலம்புனைந் துரைத்தல்

நமது மன்னர் நலம்புனைந்துரைக்க வெண்ணில், அரசர்க்குரிய **தசாங்கம்** உரைத்தலே போதுமானது. அரசர்க்குரிய தசாங்கங்களாவன:—

(1) பெயர்
(2) நாடு
(3) பதி
(4) ஆறு
(5) மலை
(6) ஊர்தி
(7) படை
(8) முரசு
(9) மாலை
(10) கொடி

ஆகிய இப் பத்துமேயாம்.

தசாங்கம் வெண்பாவில் உரைப்பது முறை. திருவாசகத்தில் இது வெண்பாவாற் கூறியிருப்பதுமன்றி, கிளியின் வாக்கு மூலமாயும் சொல்விக்கப்பெற்றிருக்கிறது. யான் இதைப் பின்பற்றிப் போயிருப்பதுமன்றி, அகரமாதி, ஔகார மீறுயுள்ள உயிர் எழுத்துகளில் யகர, வகர மெய்க்கூறு பற்றிவந்த ஐகாரம், ஔகாரங்களை விலக்கி, ஏனைய பத்து உயிர்களையும், மேற்கூறிய பத்தங்கங்கள் கூறும் பாகங்களுக்கும், முறையே முதலாகக்கொண்டு எழுதியுள்ளேன். அவை வருமாறு—

1. பெயர்.

அஞ்சொல்வாய்ப் பைங்கிளியே ஆங்கிலநா டாளுமன்ன
விஞ்சு புகழ்ப்பேர் விரித்துரையாய்—அஞ்சாம் [ன்
நிலப்பொருள்கொள் ஜார்ஜதனை நீர்ப்பொருள்கொள் [மேரி
கலக்கவந்த பேரென்று காண்.

நமது ஜார்ஜ் மன்னர், மற்ற மன்னரைவிடச் சிறந்தவர் என்று முந்திய அதிகாரத்திற் சொன்னோம். அதை இங்கு

விசாரிப்போம். அரசராவார் யாரும் நிலத்துக்குரியவர். அவ்வுரிமையுடைமைக்கு உரியராவார் இவரேயென இவர் பேரே குறிக்கும். "ஜார்ஜ்" என்னும் பெயரின் இங்கிலீஷ் பகுபத உறுப்புகளைக் கவனிக்க, எமது கோட்பாடு தெற்றென விளங்கும் — Geo = Earth = நிலம்; George = Person fit to possess land = நிலத்துக்குரிய ராவதற்கு அருகமானவர் — என்பதாம். இவருக்குமுன் இப்பேர் வாய்ந்த நால்வருக்கும் இப்பொருத்தம் இல்லாமற் போனதேன், என்பிரேல், சொல்லுதும். உலகத்தில் உள்ளன கண்டங்கள் ஐந்து; இவ் வைந்துகண்டத்தும், ஆட்சி முன்னிருந்த ஜார்ஜுகள் நால்வருக்கும் இருந்ததில்லை; ஐந்து கண்டத்தும் ஆட்சியுடையவராவர் என்பது பற்றியே இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் எனப் பெயர் அமைந்தது போலும் - இஃதொரு தெய்வத்தன்மை.

இவர் பெயர் நிலப்பொருள் குறித்து நிற்கத் தேவியார்பெயர் நீர்ப்பொருள் குறித்துவரக் காணலாம். "Mary" என்னும் ஆங்கில மொழி மேரியென்றும், மாரியென்றும் உச்சரிக்க வரும்; மாரியென்பது மழை; மழை நிலத்துக்கு இன்றியமையாப் பொருள்.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை"
"மாரியல்லது காரிய மில்லை" — ஆதலால்

மேரிமாதேவியாரின் கூட்டுறவில்லாத ஜார்ஜ் அரசுப்பட்டம் மாரிகாணுத மாநிலம்போ லாகும். இந்த இயைபு ஏனைய ஜார்ஜரசர்களுக்கு இருந்ததில்லை. இஃதும் ஒரு தைவிகமாம்.

நமதிறைவன் பிரகடனப் பத்திரத்தில் (Declaration) "தேவியாரும் ராஜ்யதந்திர விஷயத்தில் போந்த உதவி புரியச் சித்தமாயிருக்கிறூர்" என்று வெளியிட்டிருக்கின்ற

னர். ஏனைய எந்த அரசரும் இவ்வண்ணம் சொல்ல இயைந்தாரில்லை. இதுவும் தைவிகமாம்.

2. நாடு.

ஆதரவு மிக்கமொழி அஞ்சுகமே விஞ்சுபுகழ்
நாதனமை யாளுடையா னுடுரையாய் — தீதகற்றும்
ஆங்கிலம் ஈங்குளமென் றுருமுறை செய்பொருள்சேர்
ஆங்கில நாடென் றறி.

அய்யா, நீங்கள் எங்கே, நாங்கள் எங்கே; நம்மிருவர் மத்தியில் இறைமைத் திறம், குடிமைத் திறம், எங்ஙனம் நடைபெறும்; ஆபத்துக் காலங்களில் அரச உதவி எங்களுக்கு எங்ஙனம் கிடைக்கும் என்று தூரதேசத்தில் உள்ள எவரும் கேட்கப் புகுந்தால், அன்பர்களே, அஞ்சாதீர்கள், **ஆங்கிலம்** என்பர். "ஆங்கிலம்" என்பது பல்வேறு பொருள் தந்து நிற்கும் —

1. "நாங்கள் இங்கிலாந்து தேசத்தார், அண்டினவர்களுக்கு ஆபத்து வரும்படி விடோம்," என்பது ஒரு பொருள்;

2. "ஆங்கு இலம்" எனப் பிரிக்கப் பெற்று, யாம் அங்கே இருக்கின்றோம் என்று அஞ்சுகிறீர்களோ, அஞ்சற்க "ஆங்கு இல்லை", "ஈங்கு உளம்" எப்போது நினைத்தாலும் இங்கே வந்து குதித்து விடுவோம், எங்கள் கைவசம், புகைவண்டி, புகைக் கப்பல்கள் வேண்டியன உண்டு, இதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள் என்பது மற்றொன்று;

3. "ஆங்கு இல்லம்", "ஈங்கு உள்ளம்" என்னப்பட்டு, எங்களுக்கு வீடுமட்டும் அங்கே, நினைப்பெல்லாம் இங்கேதான் என்பது

மூன்றுவது பொருள். (The Interest of England is closely associated with that of India) இங்கிலாந்தின் லாபலோபம் இந்தியாவின் லாபலோபத்தைப் பொறுத்தே யுள்ளது என்று இவராலும், இவர் முன்னேராலும் பல்காலும் சொல்லப்பட்டுள்ளதும் இங்கே கூறிய பொருளை வற்புறுத்தும்.

4. "ஆங்கிலம்", அங்கேயே இருக்கின்றே மில்லை. "ஈங்குளம்" இதோ உங்கள் நடுவில் வந்துள்ளேம், பாருங்கள் என்று ஜார்ஜ் மன்னன், உள்ளூற்றுருடன் டெல்லி தர்பாருக்கு வந்து இருப்பதும் உற்று நோக்கத்தக்கது.

3. பதி.

இன்பான் மொழிக்கிள்ளாய் எங்க ளிறைஜார்ஜ—
மன்பதையைக்காக்குமா வாழ்பதியென் -பொன்போல்
இலண்டனகர் நீண்டவழிக் கேய்துணையாக் கொண்டிங்
கிலங்குடெல்லி யாகு மிரண்டு.

இவருக்குத் தலைநகர் இலண்டன். (London) இப்பதியின் பெருமை அறியாதாரில்லை, மேற் புனைந்து கூறல் மிகை. இவர் ஆளும் நாட்டின் எல்லை நாளும் நாளும் நகர்ந்து அகன்று போய்க்கொண்டே யிருக்கின்றது. நாட்டின் எல்லை வரையிலும் நகரின் பெயரும் போகவேண்டியதாகிறது. தூரம் அதிகப்பட அதிகப்பட, தன் பெயர் தனித்துப் போகல் சரியன்றென்று எண்ணித் தனக்குத் துணையாக டேல்லியை இப்பால் சேர்த்துக்கொண்டது போலும்.

"துணையோடல்லது நெடுவழி போகேல்" என்பது ஓர் அரசவாக்கு என எண்ணி, அதை இது பின் பற்றி

யதுபோற் றேற்றுகின்றது. "பிடித்தாலும் புளியங் கொம்பைப் பிடித்தான்" என்றாற்போலத் துணை தேடப் போய்த் தாழ்ந்த ஒன்றைப் பிடியாமல், தன்னிலும், பன்மடங்கு மூத்துச் சிறந்துள்ள, டெல்லியைப் பிடித்த ஒன்றே இலண்டனின் பெருந்தன்மையை விளக்கும். பாண்டவர் ஐவர் இருந்து ஆண்டபதியில் இவர் ஆள வருவாரென்பது தோன்றவே இவர் "ஐந்தாம் ஜார்ஜ்" எனப் பேர்வாய்ந்தார் என்னவுந் தோற்றுகிறது. இதுவும் ஒரு தைவிகம். இவர் டெல்லியில் முடி சூட்டிக் கொள்ள அமைந்தது, பின்னும் ஒரு பெருங் காரியத்தைக் குறிக்கும். டெல்லிக்கு அத்தினபுரம் என்பது பூர்வ நாமம். "அத்தினபுரம்" என்றால் யானை நகர் என்றாகும். டெல்லியில் மகுடாபிஷேகம் கொண்ட சமயத்தில், அந் நகரின் மத்தியில் சிங்கம் சுமந்த ஓர் ஆசனத்தின்மேல் அரசனும் தேவியாரும் வீற்றிருந்ததை உற்று நோக்கில்,

1. யானையின்மேல் சிங்க ஆசனம்;
2. சிங்க ஆசனத்தின் மேல் களிறும் பிடியும்போல் அரசனும் தேவியும்;
3. இவர் மேனின்றது சிங்கக்கொடி — இவ்வண்ணம் தம்முள் சென்மப்பகையாயுள்ள, யானையும் சிங்கமும் ஒன்றன்மேல் ஒன்று மாறிமாறி நின்று ஒத்துத் தாங்குவதை உற்றுநோக்கில் பண்டைச்செங்கோல் அரசர்கள் காலத்து இருந்த வண்ணம் புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் குடிக்கவும் பருந்துங் கிளியும் ஒரு கூட்டில் வாழவும் கூடிய சமாதானம் இவர் நாளில் மேன்மேலும் ஓங்கி வளரும் என்பதைக் குறிப்பினுணர்த்தும் என்க.

4. ஆறு.

ஈங்குநின்று பைங்கிளியே இவ்வுலகி லெவ்வமின்றி
ஆங்கிலநா டாள்வானுக் காறுரையா — யோங்கும்
மனக்கவலை மாசகற்றி வான்சுகத்தை யூட்டும்
தனக்குவமை யில்லருளே தான்.

இவர் நாட்டில் ஆறுகள் எண்ணிறந்தன. அவற்றுள் எதை இவருடைய ஆறென்னலாம். அவற்றுள் எதுதான் துன்பத்தைக் கழுவிச் சுகத்தை ஊட்டும். இவருடைய அருட்பெரு வெள்ளமே இக் காரியத்தைச் செய்யவல்லது. ஆதலால் அருட்பெருக்கே இவர்க்குரிய ஆறும்.

5. மலை.

உன்னை மறவேன் ஒருகாலும் பைங்கிளியே
மன்னனுக்கு வாய்ந்த மலைவரையிற் — றென்னன்
தமிழிலக்க மொன்றைத் தழுவுமலை மன்னற்
கமையு மலையென்ன லாம்.

இவருக்குத் "தமிழிலக்கம் ஒன்றைத் தழுவுமலை" மலையாம். அதாவது ஒரு இலக்ஷம் மலை யென்னலாம். (எண்ணிறந்தனவென்பது பொருள்.) அன்றியும், தமிழிலக்கம் ஒன்று ககரவடிவுள்ளது; அதைத் தழுவுமலை யென்னக் "கமலை" என்பது பெற்றும். "கமலை" யென்றால் இலக்ஷ்மி, ஆகவே இவர் செல்வத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய இலக்ஷ்மியை அங்கு இங்கு என்று எங்கும்போகாது, தம் பக்கத்திலேயே அசையாமல் இருக்கப் பணித்தார்போலும். இவர் திருமால் அம்சம் ஆனதால், திருமாலின் மனைவியாகிய இலக்ஷ்மிக்கு இப்படிப் பணித்தலும் அமையும்.

THE REGISTRAR ... சென்னை-600 00...

6. ஊர்தி.

ஊரெங்குஞ் சுற்றி உலவு பசுங்கிளியே
ஊர்தி நமதிறைக்கியா தோதுவாய் — பார்தனிலே
ஊர்தி கரிபரியென் றோராதார் கொள்ளத்தான்
ஊர்தீப் பலத்தியங்கு மோர்ந்து.

ஊர்தியின் உட்பொருளை யுணராதார் கரிபரி முதலிய வற்றை ஊர்தியாகக்கொள்ள, இவர் ஊர்தீயின் பலத்தா லியங்கும் புகைக்கப்பல், புகைவண்டி, மோட்டார்க்கார் முதலியவற்றையே ஊர்தியாகக்கொண்டு மகிழ்வார்.

7. படை.

எப்பொழுது மின்சொல் லியம்பு பசுங்கிளியே
ஒப்பில்லா நம்மிறைவர்க் கோதுபடை — ஒப்பாரூர்ச்
செய்யிற்செம் மாரிபெய்து செய்யசய நெல்வளர்க்கும்
வெய்யமழு வீதும் மிகை.

இவர் விற்படை, வாட்படை, வேற்படை முதலியன பழை யனவெனக் கழித்து, வெடிப்படையைப் புதியதென்று புகுத்தியுள்ளார். சத்துருக்களுடைய ஊராகிய வயல்க ளில் செம்மாரி பெய்து, "ஜயம்" என்னும் நெல்லை விளை விக்கும் செம்மேகமாகிய பீரங்கிப்படையே இவர்க்குப் படையாக இயங்கிவந்தது; இப்பால்

வேலல வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்,

என்னும் தமிழ்வேத வாக்கியத்தின் உட்பொருளை யுணர் ந்து கடைப்பிடித்த பின்னர்ச் செங்கோலே படையாக, மற்றப்படை மிகையெனத் தள்ளுண்டன.

8. முரசு.

ஏதமிலா இன்சொன் மரகதமே யெம்மிறைக்கு
மோத உதவு முரசியம்பாய் — தீதில்லா
வாய்ப்பறையை நாக்கடிப்பால் வாய்மை பெறவறைந்து
சாற்றுவது போற்றுமுர சாம்.

யுத்தமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு என்னும் மூவகை முரசையும் வீரம், கீர்த்தி, புகழ் முதலியவற்றை வெளியிடும் கருவியாக ஏனையோர் கொண்டிருக்க,

''வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்''

என்னும் நீதிப்படி வாய், நா, என்னும் இரண்டின் காரியமாகிய வர்த்தமானப் பத்திரிகை மூலமாய் எண்ணத்தையறிவதும், அறிவிப்பதுமாயுள்ளார் நமதிறைவர்; அதாவது வர்த்தமானப் பத்திரிகையே இவர் முரசாம். ஏனையோர் முரசு அறிவிப்ப தொன்றற்கே யாகும். இவர் முரசு அறியவும், அறிவிக்கவும் உதவும் விசேடம் நோக்கத்தக்கது.

9. மாலை.

ஒண்டொடிகைக் கின்றி யமையா உயர்கிளியே
மண்டலத்தை யாளிறைக்கு மாலையென்னே - தண்டலைய
பூமாலை சோரும் புகழ்மாலை வீறுமெற்பாட்
டாமாலை மாலை யவர்க்கு.

பூமாலை சோரும், புகழ் மாலை வீறும் என எண்ணி, எற்பாட்டினும் மாலையே, தமக்குச்சிறந்த மாலையாகக் கொண்டுள்ளார் நமதிறைவர். எற்பாடு = சூரியன் அத்தமிக்கும் சமயம். அதாவது அந்திப்பொழுது, எற்பாட்டினுமாலை = அவ் வந்திப்பொழுதாகிய மாலை; அதுவே இவர் நாட்டிற்கு

அமைந்ததாகவுள்ளது. அதாவது அவர் நாட்டில் சூரியன் ஒரு நாளும் அத்தமிக்கிறதில்லை. ஆதலால் அவர் நாட்டில் எங்கே சென்றாலும், அந்திப்பொழுதே முந்தி நிற்கும் ஆகவே மாலைப் பொழுதே யவர்க்கு மாலை யென்ப.

10. கோடி.

ஒவில்லாச் சீர்வாய்ந் துயரு மெமதிறைக்குக்
கூவுங் கிளியே கொடியியம்பாய் — வாவிமுன்
செல்லும்முன் பின்பார்க்கும் சிங்கமிது வேயிவற்கு
வெல்லும் கொடியா விளம்பு.

ஓடும் விடையும், பறக்கும் புள்ளும், ஊரும் பாம்பும், ஒடியும் வில்லும் கொடியாகாது, முன்வைத்த காலைப் பின்வாங்காமல், முன்பின் பார்த்துச் செல்லும் சிங்கமே இவர்க்குக் கொடியாக வாய்ந்துள்ளது. அதாவது இவர் முன்பின் யோசித்துப் பாராமல் ஒரு காரியமும் செய்யத் தொடங்கார். தொடங்கினால் தொட்டதை விடாத வுறுதியுடையவர் என்பது குறிக்கவே சிங்கம் கொடியாக வாய்ந்ததென்னலாம். இத்தகைய தசாங்கம் ஏனையோர்க்கு வாய்த்திலது. இது ஒரு பெருஞ்சிறப்பு.

N. B.—இவர் தசாங்கத்துக்கு உண்மையான பத்து உயிரும் ஒழுங்குறத்தலைப்பில் வந்திருப்பதைக் கவனிக்கப் பின்னும் ஒன்று வெளிவரும். உண்ணச் சோறும், குடிக்க நீரும் இன்றி உயிர்மாளும் என்பது சரியன்று; அரசன் ஒறுக்க ஆபிரக்கணக்காய் மாண்டன குடிகள் என்று பண்டைக்காலத்திருந்தது போலில்லாமல், நமதரசர்பெருமான் உயிர்க்குயிராய் விளங்கிவருகிறார் என்பதும் பெறலாகும். அன்றியும்,

நெல்லுமுயி ரன்று நீருமுயி ரன்று
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்

அதனால்,

யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே — என்னும் பண்டைய நீதிவாக்கியத்துக் கிணங்க நடந்து வருகிறார் நமதரசர் என்பதையும் நமக்குணர்த்துகின்றது.

III. வாழ்க்கைத் துணை நலம் கூறல்.

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுப்பி னல்லால் — ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று.

குடி வாழ்க்கை என்பது ஒரு மாட்டு வண்டி. அதாவது மெதுவாய்ப் போகக்கூடிய வண்டி. அதை யிழுக்கப் பூட்டிய மாடு ஒத்த அன்புடனுறவாடும் மனைவியும் கணவனும் ஆம். மாறுபட்ட செய்கையுடைய இருவர் பூண்டிழுத்தால், கடாவுங் காளையும் பிணைத்தாற்போல ஒழுங்குறக் காரியம் நடவாது என்பது இதனால் பெறலாகும். இந் நீதியை விளக்குதற்கான நல்ல உதாரணம் நமது மன்னரும் தேவியாரும். "கண்ணிரண்டும் ஒன்றையே காணும்" என்றாற்போல, இருவரும் ஒருமனப்பட்டவர். இவருள் ஒருவர்க் கொருவிதம், மற்றொருவருக் கொருவிதம் தோன்றுவதில்லை. ஆதலால், ஒத்த அன்புடைய மனைவி கணவர்

சேர்ந்த தம்பதிகளில் இவர்க்கு ஒப்புயர் வுரைக்க ஒருவரும் இல்லை.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

என்று நல்ல மனைவியானவள் இல்வாழ்க்கையொன்றற்கே துணையென நாயனார் கூறியுள்ளார் — இவர் அத்தகையரல்லர்.

பாடுந் துணைவி படைத்துணைவி பந்துவினை
யாடுந் துணைவியர சாள்துணைவி — சூடுவன
சூடுந் துணைவியொத்துச் சூழ்துணைவி யன்பினுற
வாடும் துணைவி யவர்க்கு

என்னப் பல விதத்திலும் துணையாயுள்ளவர். ஈண்டுக் கூறிய ஒவ்வொன்றையும் விஸ்தரித்துக் கூறவேண்டியதில்லை; அவர் செய்த ஒரு காரியத்தை யெடுத்துச் சொல்வதுவே போதுமானதாகும். நமதரசன் தமது நாட்டிற் பாராத இடம் கிடையாது. இப்போது நிகழ்ந்த இந்திய யாத்திரையை யுள்ளிட்டு 48,000 மைல் யாத்திரை செய்திருக்கிறார்; இதில் 38,000 மைல் கடல் யாத்திரை. இந்த நீண்ட கடல் யாத்திரையில் விடாது துணையாய் வந்தவர் மாதேவியார் என்றால் தேவியார் துணை நலம் தெற்றென விளங்கும். இப் பெரிய யாத்திரையில், அரசர் பெருமான் ஒருவிதக் கஷ்டத்துக்கும் உள்ளாயினாரல்லர்.

"இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" யன்றோ? முற்காலத்திலோ, தற்காலத்திலோ, இத்தகைய துணையோடு, இப் பெரிய யாத்திரை செய்தார் எவரும் இல்லை. மனைவியுடன் யாத்திரை போகச் சிலர்க்கு நேர்ந்ததுண்டு. ஆனால் இவர்போன்று அன்று. அரிச்சந்திரன், நளன், இராமன் முதலியோர் மனைவியுடன் நாட்டைவிட்டுச்

காட்டுக்குப் போயினர். ஓரடியேனும் கடல்மேற் சென்றூர் அல்லர். நாட்டின் வளத்தை நன்கறியப் போனாரும் அல்லர். மனம் ஒப்பிப்போனாரும் அல்லர். மனைவியாரைத் துணையெனக் கொண்டு சென்றாரும் அல்லர். இடையில் நேர்ந்திட்ட கஷ்டம் யாம் அறியாததும் அன்று.

"கான்புகுந்தான் சத்தியவான் கார்மேனிப் போர்வீரன்
தான்புகுந்தாற் போலன்று தந்தைநொந்து — வான்புகுந் [தான்
இல்லை மனைவி பிரிந்ததில்லை யிரேழாண்
டெல்லை திரிந்தானு மில்லை"

என்று புகழப்பட்ட சாவித்திரி சத்தியவானைச் சொல்லலாம் என்றாலோ, அவர்போன நிலைமையும் வேறு. ஆதலால் இவர்க்கு இவரே யிணை.

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல னன்மக்கட் பேறு

என்றதற் கேற்ப நமது அன்னையார் அரசர்க்கு மங்கலமாயிருந்தது மன்றி, மக்கட் பேற்றாலும் சிறப்பு வாய்ந்தவர். இவர்க்கு ஆண்மக்கள் ஐவர், பெண்மகள் ஒருவர். இவ்வாறுபேறும் நூறு பேராகுமாறு எல்லாம் வல்ல கடவுள் இன்னருள் புரிவாராக.

IV. அரசிய லுரைத்தல்.

மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காக்க வல்லனே.

இது "இன்னராவார் மன்னராவார்" என்பது. (This is the definition of a King.)

தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், திருடர்களாலும், துஷ்ட ஜந்துக்களாலும் கஷ்டம் நேரி டாதபடி குடிகளைக் காத்துவருபவன் எவனோ அவனே அரசனுவான் என்பது இதன் பொருள்.

1. தன்னுற் கஷ்டமில்லையென்பது.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்,

என்பதற் கிணங்க ராஜ சேவையிற் கஷ்டமில்லை யென்பதும், கடுஞ்சொல் சொல்ல அவர் அறியார் என்பதும், டில்லி தர்பாரில் கண்டோம்.

பார்வேந்தர் பெருஞ்செல்வம்
பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம்
குறைவுபடா திருத்தலினல்,

என்பதை நன்குணர்ந்து, வேளாண்மைத் தொழில் விருத்திக்கு வேண்டியன யாவும் வெகு கவலையோடு செய்து வருகின்றார்.

கருமஞ் சிதையாமற் கண்ணோட்டஞ் செய்வார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு,

King George V.

Queen Mary.

என்ற திருப்பாட்டிற் கிணங்க, ராஜ நீதிக்கு மாறுபடா மல், செய்யக்கூடிய தாக்ஷண்ய காரியங்கள் எதையும் தாழாமற் செய்து, உலகத்தைத் தனக்கு உரித்தாக்கிக் கொள்ளுகிறார். இதை டில்லி தர்பாரில் நடத்திய பல காரியங்களால் அறியலாம்.

பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு,

என்ற நீதியைப் பின்பற்றி இவர் லண்டன் நகரில் நடந்த மகுடாபிஷேகத்துக்கு, இங்குள்ளவர்களை யழைத்தால், வீணாக மிகுந்த பணச்செலவும் தேக பரிசிரமமும் உண்டா கும் என்பதை நன்குணர்ந்து நாமிருக்கு மிடத்துக்குத் தாம் மக்கள் மனைவியாருடன் எழுந்தருளியது யாம் அனை வரும் உற்று நோக்கத் தக்கது.

தம்பொருட்டு மன்பதைகள் ஒரு சிறிதும் கஷ்ட நஷ்டம் உறலாகாது, என்று கருதித் தம்மால் தர்பாருக்கு அழைப்புண்ட விருந்தினர் யாவர்க்கும் வழிச் செலவும், படிச் செலவும், தம் கையிலிருந்து கொடுத்தருளினார்.

ஈண்டுக் கூறிய காரியங்களால் தம்மாற் கஷ்டமில்லை யென்பது வெளியாகும். அன்றியும், இந்நாட்டில், எங் கெங்கும் மகுடாபிஷேக ஞாபகக் குறியாக, மாமரம் பலாமரம் வைத்து வந்ததைப் பாராதார் சிலர், கேளாதா ரிலர். இது எதைக் குறிக்கும், "மரம் வைத்து வளர்த் தவனிருக்க அந்நியன் அதன் பலனை யனுபவிக்கி றான்" என நேரிடாமல், தாமே யனுபவிக்கலாம், தம் புத் திர பௌத்திரர்களும் அடைவார்கள் என்னும் பூரண நம்பிக்கையுடன் இக்காரியம் செய்யப்பட்டதே யன்றி வேறன்று. கொதிக்குஞ் சோற்றை வடித்திறக்குவதும்

வடித்த சோற்றை எடுத்துண்ணுவதும் நிச்சயமற்று இருந்த காலத்தை இவர் காலத்தோடு ஒத்து நோக்குக.

N. B.—இந்தியாவை விட்டுப்புறப்படுகையில் சக்கரவர்த்தியார் தமது விஜயகாலத்தில் நடந்த விபவங்களைப் பற்றித் தமது முதன்மந்திரியாருக்குத் தந்தியொன்று அனுப்பி யிருக்கிறார். அதன் மொழி பெயர்ப்பு இதனடியிற் காண்க :—

“தாம் செய்த இந்திய விஜயம், ஒரு சிறந்த ஜய விபவம் என்ற செய்தி, எப்பக்கத்து மிருந்து தமக்கு எட்டியது; அது தான் எதிர்பாராத அளவினது; எவ்வகுப்பினரும், எக்குலத்தவரும், எம்மதத்தினரும், ஒத்த அன்புடனும் குதூகலத்துடனும், தம்மையும், இராக்கினியாரையும், வரவேற்று மகிழ்ந்தனர்; தமக்கும், தமது ஆங்கிலத்தவர்க்கும் இருந்த பரஸ்பர விசுவாஸத்தினலேயே தமது சிந்தித மனோரதம் நிறைவேறியது; அதற்குத் தாம் ஆநந்திக்கிறார்; தாம் செய்த விஜயம், இந்தியாவுக்கும், இராச்சியத்துக்கும், நீடித்த நன்மைக்கு ஹேதுவாயின், பெரிதும் மகிழ்வார்” என்பதேயாம்.

இதனல் தம்மால் யாதொரு கஷ்டமும் குடிகளுக்கு நேரிட்டதில்லை யென்பது மன்றித் தம்மால் இத்துணை நன்மை உண்டாயிருக்கிறது என்பதும் தெளியலாகும்.

2. தம் பரிசனத்தாற் கஷ்டம் இல்லை யென்பது.

(1) கவர்னர், கலக்டர், காவற்றலைவர் முதலிய தண்டத் தலைவர், தானைத் தலைவர்கள் ஒரு சிறிதும் குடிகளிடத்தில் எதிர் பாராமல், தம்மால் அவர்கட்கு, ஆகவேண்டிய யாவும், அரைக்கணமேனும் தாழாமல், சிரத்தையுடன்

170424

செய்து வருவதைத் தினமும் பார்த்தும் கேட்டும் வருகிறோம்;

(2) "என்று முகம னியம்பா தவர்கண்ணும் சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்" — என்பது பொருந்தத் தாமிருக்கும் இடத்துக்குக் குடிகளை யழைத்து, முறை செய்வது போதாது என்று கருதி, அவர்களிருக்கு மிடத்துக்குத் தாம்போயும் வேண்டியன செய்து வரும் உத்தியோகஸ்தர் பலர் இருக்கின்றனர்;

(3) "நினைப்பின்றித் தாமிருந்த கோடுகுறைத்து விடல்" என்றாற் போலத் தமக்கு அநுகூலஞ் செய்து வருபவர்கள் பேரிலும், அறியாமையால் எத்தனையோ ஜனங்கள் புகார் மனுக்கள் எழுதிவிடுகிறார்கள். அவர்கள் குற்றத்தை மன்னித்துத் தன்னவன், மாற்றான், அன்னியன் என்று பேதம் பாராட்டாமல் நீதிசெலுத்துபவரும் எண்ணிறந்தவர்கள். இதனால் பரிசனத்தாரால் சுகமேயன்றிக் கஷ்டம் இல்லையென்பது திண்ணம்.

3. பகைவரால் தீங்கு இல்லையென்பது.

உட்பகை, புறப்பகையெனப் பகை இருவகைத்து. இவற்றுள் —

(1) புறப்பகையால் வருந் தீங்கு சிறிதும் நமக்கில்லையென்பது உறுதி. இம்மகிபனுடைய பிதாவுக்குச் "சமாதானச் சக்ரவர்த்தி" யென்று காரணப் பெயர் உண்டாயிருக்கின்றது. அதனால் அவர் ஆட்சியின், தொடக்கத்தில் சண்டை யிருந்ததேயாயினும், முடிவில் சமாதானமே குடிகொண்டு இருந்ததென்பது வெளிப்படை; அவரை உடன் அடுத்து ஆட்சி புரியும் இவர் நாளில் சண்டையே இல்லையென்றும், அதனால் பகையே இல்லையென்றும், அத

ளுல் பகையால் வருந் தீங்கும் இல்லையென்றும் நாம் கண்கூடாக அறியலாகும்.

(2) உட்பகை சிறிது காணப்பட்டால், உடனே அதைத் தலையெடுக்கவொட்டாமல் அடக்கி வருவதற்குப் பல உபாயங்கள் கையாடப்பட்டு வருகின்றன. அன்றியும், கல்வி யறிவின்மையே உட்பகைக்கு அஸ்திவாரக்கல் என்பதை நன்கறிந்து, அதைக் களையுமாறு 50 லக்ஷம் ரூபாய் டில்லி தர்பாரில் நன்கொடை யளித்திருக்கிறுர்.

ஆதலால் இருவகைப் பகையுமின்றி நாம் இனிது வாழ்கின்றோம் என்பது திண்ணம்.

4. கள்வர் பயம் இல்லை யென்பது.

(Beware of Thieves) "கள்வர் பயம் ஜாக்கிரதை" என்று எழுதியிருந்த ரயில்வே நோட்டீஸ் போர்ட்டுகள் எல்லாம் சேப்புக் காளைக்குத் தீனியா யொழிந்ததை நிதர்சனமாய்ப் பார்த்திருக்கிறோம்; (சேப்புக்காளை = நெருப்பு) "இருட்டுக்காலம் எச்சரிக்கை" என்று ரோந்து சுற்றுகிறவர்கள் சொல்லி வந்ததைக் கேட்டிருக்கிறோம். இந்தக் கேவல சங்கதிகள் இப்போது இல்லாமற் போனதும் கண்டிருக்கிறோம். ஆதலால் கள்வர் பயம் நின்று போயிற்றென்றே சொல்லலாம்.

5. துஷ்ட ஜந்துக்களால் கஷ்டம் இல்லையென்பது.

புலியா லடியுண்டான் பாம்பால் கடியுண்டான்
யானை பயிரையழித்தது மாடு கதிரைமேய்ந்தது,

என்பன போன்ற கஷ்டம் இக்காலத்தில் மட்டாயது. பயிரை அழிப்பனவெல்லாம் பட்டியில் அடைபடுகின்றன; உயிரை வதைப்பனவற்றைக் கொன்றவர்களுக்குப் பரிசு

கொடுக்கப்படுகின்றன. பண்டைய அரசர்களைப் போலப் பார் வேட்டையாடுகின்றா ரில்லை யென்பீர்களோ? வேட்டையாடத் தெரியாமையினாலன்று. சக்ரவர்த்தியார் டில்லிக்கு விஜயம் செய்திருந்த காலத்தில் காஸ்மீரத்தில் வேட்டையாடி யாவரையும் களிப்பித்தது அறியாதார் யார்? சிறு பொருள் கொடுத்துப் பெருங் காரியத்தைச் செய்யக் கூடுமாயின் நலமன்றோ. அன்றியும் வேட்டையாடியதால் உயிர் மாண்டான் வீரகுமாரன் பிதா; ரிஷி சாபம் பெற்றான் தசரதன்; ரிஷி கோபமுற்றான் அரிச்சந்திரன். யார் செய்கை சிறந்தது? இங்ஙனமாக குடிகளுக்கு வரக்கூடிய ஐவகைக் கஷ்டங்களையும் மாற்றுவார் என்பது பற்றியும் ஐந்தாம் ஜார்ஜ் என்னலாயிற்று எனவும் கூடும். இதுவும் தெய்வீகமே.

V. அமைச் சமைப் புரைத்தல்.

நமதரசருக்கு முதன் மந்திரியார் ஆஸ்குவித் கனவான், இந்திய மந்திரி க்ரு பிரபு. இவர்கள் சுபாவத்தில் அறியத்தகும் ஒன்றை அறிந்து அரசன் செய்யத் தவறினும் எடுத்துக்காட்டிச் செய்விக்கும் திறமையுடையவராவர்.

> உற்றது கொண்டுமேல்வந்
> துறுபொரு ளுணருங்கோளார்
> மற்றது வினையின்வந்த
> தாயினுமாற்றலாற்றும் பெற்றியர்,

என்னும் அமைச்சிலக்கணம் நன்கு வாய்ந்தவர்கள் என்பது பங்காளப் பிரிவினையால் உண்டான சங்கடங்களைச்

சமயம் பார்த்து, மாற்றலாற்றினதால் வெளிவரும். இது விஷயமாய் நூன்முறைப்படி செய்வது இன்னதென்று அறிந்துள்ளாராயினும், உலகத் தியற்கையையும் ஒட்டி நடப்பது உத்தமம் என்று நன்மை பயக்கும் தவறுகளையும் கடைப்பிடித்து நடந்திருக்கிறார்கள்;

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்,

என்னும் நீதியை ஒட்டி யென்க. பிரிக்கவேண்டியதைப் பிரித்துச் சேர்க்கவேண்டியதைச் சேர்த்துப் பிரிந்தாரைப் பொருத்துமாறு பொருத்தியும் உள்ளார்;

சுருக்கிச் சொல்லின் அரசனுக்கு எது நலம் என்று தோற்றுகிறதோ அதுவே இவருக்கும் நலம் எனத் தோற்றும். எது கெடுதல் என்று தோற்றுகிறதோ அதுவே இவருக்கும் கெடுதல் எனத் தோற்றும். இவ்விஷயம் பங்காளப் பிரிவினை நீக்கியதிலும், டில்லியைத் தலைநகர் ஆக்கியதிலும் நன்கு விளங்கும். அரசனும் மந்திரியும் ஒத்துப் பேசிக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்யவும் கூடும்; அங்ஙனம் செய்த காரியம் நல்லதுமாகும், கெட்டதுமாகும் என்னலாம். "நல்லது கெட்டதை நாவாலறிக" என்பதற்கேற்ப, டில்லியை ராஜதானியாக்கியதும், பங்காளப் பிரிவினை நீக்கியதும் ஆகிய இரண்டு விஷயத்திலும் வெளிவந்த அபிப்பிராயத்தைக் கவனிக்க விளங்கும்:—

(1) லாகூரார் தம் நாட்டில் தலை நகரம் வாய்ந்ததைப் பெரிதெண்ணி மகிழ்ந்தார்கள்;

(2) மகமதியர்கள் தங்கள் பாதுஷாக்கள் ஆண்டிருந்த பழைய இடம் புதுக்குற்றதை எண்ணிப் புகழ்ந்தார்கள்;

(3) ஹிந்துக்கள், பாண்டவர் ஆண்ட இடம் மீண்டும் ஆண்டிடும் இடமானதை வியந்தார்கள்;

(4) சென்னை பம்பாய்க்காரர்களுக்குத் தம்மினும் விசேஷித்த நலம் தமது பங்காளிகளாகிய பங்காளிகளுக்கு இல்லாமற் போனதில் சந்தோஷம்;

(5) பங்காளிகள் வருந்தினார்களோ வெனில், இல்லை. அவர்களுக்கு இரட்டைச் சந்தோஷம் — இரண்டு பட்ட நாடு ஒன்றுபட்டது, ஒன்று; மேலதிகாரிகள் விசேஷமாய்த் தலையிடாது, தங்கள் நாட்டுக்குத் தனிக் கவர்னர் வாய்த்தது மற்றொன்று;

(6) ராஜப் பிரதிநிதிக்குத் தமது ராஜதானி, மற்ற மூன்றிற்கும் நடுநாயகமாக வாய்த்ததில் வெகு கௌரவம்.

N. B.— இவ் வண்ணம் எவ்வெவரும் கொண்டாடக்கூடிய காரியம் எங்ஙனம் கெட்டதாகும்?

இச் சமயம் அரசர்க்கு மனமொத்த ராஜப் பிரதிநிதி வாய்த்தது ஒரு தெய்வீகம்.

VI. குடிநலம் புனைதல்.

பூமண்டலம் எங்கும் நமது மன்னர் ஆட்சிபொலிந்தோங்குகின்றது. குடிகள் ஓர் உலகத்தவர் அல்லர்; ஒரு நாட்டவர் அல்லர்; ஒரு பதியினர் அல்லர்; ஒரு திசையினர் அல்லர்; ஒரு நிறத்தவர் அல்லர்; ஒரு மதத்தினர் அல்லர்; ஒரு மரபினர் அல்லர்; ஒரு தரத்தினர் அல்லர்; ஒரு பாஷைக்காரரர் அல்லர்; ஒரு சிலரல்லர்; ஆத

லால் ஒருமனப்படக் கூடியவர் அல்லர். இப்படி யிருந்தும் எத்தனையோ கோடி ஜனங்கள் ஒத்து ஒருமனப்பட்டுப் பத்தியிற் சிறந்து பல்லாண்டு கூறக் கண்டனம்.

I. புதுஉலகு பழஉலகு புரைகொளக் கண்டிலேம்
மேனாடு கீழ்நாடு விண்டிடக் கொண்டிலேம்
பல்பதி யினரும் பல்லாண்டு பாடினர்
எண்டிசை யினரும் ஏத்திக் கொண்டாடினர்
சைவர் வைணவர் சார்ந்த கிறிஸ்தவர்
மகமதி யர்கள் மற்றையோ ராகிய
பல்வேறு சமயிகள் சொல்வேறு பட்டிலர்
பிராமண ரேனையோர்ப் பகிர்ந்து நின்றாரிலை
பண்டிதர்ப் பாமரர்ப் பகுத்தறி தற்கிலை
செல்வர் வறிஞர்த் தெரிதற் கிடமிலை
பாலரொடு விருத்தர் பாடிநின் றாடினர்
ஆடவர் மகளிரோ டன்புடன் பாடினர்
ஆட அறியாரும் ஆடிக் களித்தனர்
பாட அறியாரும் பாடிப் புகழ்ந்தனர்
காணு வெவரும் கண்டு வியந்தார்
பூணு வெவரும் பூண்டு சிறந்தார்
வடமொழி தென்மொழி வடுகு கன்னடம்
பார்சி மலையாளம் பங்காளம் உர்து
ஹிந்தி மா ராஷ்டிரம் யாவையும் ஒருங்கே
கூடிக் களித்துக் குதூகல மடைந்து
பழம்பகை நீங்கிப் புதுநட்புப் பூண்டன
பாட்டைகள் எங்கும் பந்த ரிட்டனர்
நாட்டில் எங்கு நல்வர விசைத்தனர்
இறைவனும் இறைவியும் இனிய மக்களும்
குறைவெது முறாமல் நிறைநலம் பெற்றுப்

படிமிசைக் களித்துப் பல்லாண்டு வாழத்
தத்த மாலயங்களில் சார்ந்தொரு மனத்தராய்
வழிபா டியற்றி மகிழ்ந்தே
விழவயர்ந் தனர்காண் மேதினி யோரே.

வானோக்கி வாழு முலகெலா மன்னவன்
கோனோக்கி வாழுங்குடி — என்ற வண்ணமும்

அரசனெவ்வழி குடியுமவ்வழி என்ற வண்ணமும் பொருந்த மன்பதையாவும் இன்புறலாயின. இந்நாள் போல எந்நாளும் வேற்றுமைவிட்டு ஒற்றுமையுற்று யாவரும் ஒழுகுமாறு எல்லாம்வல்ல கடவுள் அருள்புரிவாராக.

பொது அபிப்பிராயம்—அநுபந்தம் (See page 6 of the Weekly Hindu, dated 18-1-12.) சக்கிரவர்த்தியார் மனைவி மக்களுடன் செய்த இந்த விஜயம் ஐந்தரை வாரம் நீடித்தது. இந்த ஐந்தரை வாரத்தில் 30 கோடி ஜனங்களுள்ள இந்த நாட்டில் எங்கே பார்த்தாலும் கொண்டாட்டமே நிறைந்திருந்தது: எண்ணமிட்டாவது, எதிர்பாராமலாவது, காதிற்பட்டாவது, படாமலாவது, எவ்வித அசம்பாவிதமும் நேரிட்டுக் கொண்டாட்டத்துக்கு விகாதம் உண்டாக்கிற்று என்றற்கில்லை. சுருங்கச்சொல்லில் நிகழ்ந்த காரியம் மனித ஜாதியாரின் பெரும்பாகம் அடங்கிய ஒரு குடும்பத்தின் நடந்த ஒரு சுப காரியக்கூட்டம் போலும் இருந்தது. இது உலக சரிதத்தில் என்றுங் கண்டறியாத ஒன்று. இதுதான் சென்ற ஐந்தரை வாரத்தில் நடந்தேறிய காரியம்: இதை ஏனைய நாகரிக உலகம் அறிவதாக.

எல்லாம்வல்லான் றிருவடி வாழ்க. *I. S.*

PRINTED AT THE CAXTON PRESS, MADRAS — 1912.

சிறுவர்களுக்கான கதைகள்

அடியிற் கண்ட சிறு கதைப்புத்தகங்கள் இனிய செந்தமிழ் நடையில் சிறுபிள்ளைகளுக்கு மனோற்சாகத்தை யுண்டாக்கும் வண்ணம் இயன்றிருக்கின்றன. இவற்றில் எதையேனும் வாசிக்கப்புகும் சிறுவர்கள் புத்தகத்தை முடிக்கு முன்னந் திருப்தியடையார் என்பது திண்ணம். ஆரம்பத்தில் மாத்திரம் இனிமைவாய்ந்து செல்லச் செல்லப் படிப்போர்க்கு வெறுப்பை யுண்டாக்காமல் இவைகள் எளிய வகையில் நல்ல நீதிகளைப் போதிக்கும். இவை எலிமென்டரிப் பாடசாலைகளில் வீட்டுப்பாடமாக அமைப்பதற்கு மிகவும் ஏற்றவை. இப்புத்தகங்களில் கடின பதங்களும் கடின சந்திகளும் நீக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் தடித்த கடிதத்தில் திருத்தமாக அச்சிடப்பட்டுள்ளன.

நாற்பது திருடர் கதை	...	0	3	0
அல்லாவுதீன்	...	0	2	6
நீதிக்கோபுரம்	...	0	2	0
டிக் உட்டிங்க்டன்	...	0	2	0
ஆபத்தில் நேசன்	...	0	I	6
செங்கை வளவன்	...	0	I	6
ஆராயும் அங்குட்டன் கதை	...	0	I	6
போலி ராஜ குமாரன்	...	0	I	6
நல்ல பாடம்	...	0	I	6
நல்ல பிள்ளைகள்	...	0	I	0
நல்ல சிநேகிதர்கள்	...	0	I	0
மூன்று தங்க மாம்பழங்கள்	...	0	I	0
மூன்று குமாரர்கள்	...	0	I	0
வெள்ளைப் பூனை	...	0	I	0
தோட்டக்காரன்	...	0	I	0
காதர் அலி	...	0	0	6

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னதம்பித் தெருவு, சென்னை.

170474